# Chapter 1.2

# கவின்மிகு கப்பல்

---

## மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**Question 1.**
இயற்கை <u>வங்கூழ்</u> ஆட்ட – அடிக்கோடிட்ட சொல்லின் பொருள்
அ) நிலம்
ஆ) நீர்
இ) காற்று
ஈ) நெருப்பு

**Answer:**
இ) காற்று

**Question 2.**
மக்கள் ………………….. ஏறி வெளிநாடுகளுக்குச் சென்றனர்.
அ) கடலில்
ஆ) காற்றில்
இ) கழனியில்
ஈ) வங்கத்தில்

**Answer:**
ஈ) வங்கத்தில்

**Question 3.**
புலால் நாற்றம் உடையதாக அகநானூறு கூறுவது ………………
அ) காற்று
ஆ) நாவாய்
இ) கடல்
ஈ) மணல்

**Answer:**
இ) கடல்

**Question 4.**
'பெருங்கடல்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) பெரு + கடல்
ஆ) பெருமை + கடல்
இ) பெரிய + கடல்
ஈ) பெருங் + கடல்

**Answer:**
ஆ) பெருமை + கடல்]

**Question 5.**
இன்று + ஆகி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் …….
அ) இன்று ஆகி
ஆ) இன்றி ஆகி
இ) இன்றாகி
ஈ) இன்றா ஆகி

**Answer:**
இ) இன்றாகி

**Question 6.**
எதுகை இடம்பெறாத இணை ……….
அ) இரவு – இயற்கை
ஆ) வங்கம் – சங்கம்
இ) உலகு – புலவு
ஈ) அசைவு – இசைவு

**Answer:**
அ) இரவு – இயற்கை

## பொருத்துக

1. வங்கம் – பகல்
2. நீகான் – கப்பல்
3. எல் – கலங்கரை விளக்கம்
4. மாட ஒள்ளெரி – நாவாய் ஓட்டுபவன்

**Answer:**
1. வங்க ம் – கப்பல்
2. நீகான் – நாவாய் ஓட்டுபவன்
3. எல் – பகல்
4. மாட ஒள்ளெரி – கலங்கரை விளக்கம்

## குறுவினா

**Question 1.**
நாவாயின் தோற்றம் எவ்வாறு இருந்ததாக அகநானூறு கூறுகிறது?

**Answer:**
நாவாயின் தோற்றம் : உலகம் புடைபெயர்ந்தது போன்ற அழகு பொருந்திய தோற்றத்தை உடையது நாவாய் என்று அகநானூறு நாவாயின் தோற்றத்தைப் பற்றி கூறுகிறது.

**Question 2.**
நாவாய் ஓட்டிகளுக்குக் காற்று எவ்வாறு துணை செய்கிறது?

**Answer:**
இரவும் பகலும் ஓரிடத்தும் தங்காமல் வீசுகின்ற காற்றானது நாவாயை அசைத்துச் செலுத்தி நாவாய் ஓட்டிகளுக்கு உறுதுணையாக நிற்கிறது.

## சிறுவினா

கடலில் கப்பல் செல்லும் காட்சியை அகநானூறு எவ்வாறு விளக்குகிறது?

**Answer:**

- உலகம் புடைபெயர்ந்தது போன்ற அழகு பொருந்திய தோற்றத்தை உடையது நாவாய்.
- அந்த நாவாய் புலால் நாற்றமுடைய அலைவீசும் பெரிய கடலின் நீரைப் பிளந்து கொண்டு செல்லும்.
- இரவும் பகலும் ஓரிடத்தும் தங்காமல் வீசுகின்ற கடற்காற்றானது நாவாயை அசைத்துச் செலுத்த பெரிதும் துணை புரிகின்றது.
- உயர்ந்த கரையை உடைய மணல் நிறைந்த துறைமுகத்தில் கலங்கரை விளக்கத்தின் ஒளியால் திசை அறிந்து நாவாய் ஓட்டுபவன் நாவாயைச் செலுத்துவான் என்று அகநானூறு கடலில் கப்பல் செல்லும் காட்சியை விளக்குகிறது.

## சிந்தனை வினா

தரைவழிப் பயணம், கடல்வழிப் பயணம் ஆகியவற்றுள் நீங்கள் விரும்புவது எது? ஏன்?

**Answer:**

- நான் விரும்பும் பயணம் கடல்வழிப் பயணம்.
- ஏனென்றால் கடலில் செல்லும் போது கடலில் வீசும் இதமான காற்று உடலை வருடிச் செல்லும். மேலும் கீழுமாக தாவிச் செல்லும் அலைகள் காண்பதற்கு கவினுற அமைந்திருக்கும்.
- கடலில் வாழும் பல்வகை மீன்கள் கடல் நீரில் நீந்திச் செல்லும் காட்சி பார்ப்பதற்கு மிக அழகாக இருக்கும்.
- இரவு நேரத்தில் கப்பலிலிருந்து ஆகாயத்தைப் பார்க்கும் போது பல்வகை விண்மீன்கள் மற்றும் நிலவு நம்முடனே பயணிப்பது போன்ற தோற்றம் நம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

## கற்பவை கற்றபின்

**Question 1.**
கடலில் கிடைக்கும் பொருள்களின் பெயர்களைத் தொகுக்க.

**Answer:**
கடலில் கிடைக்கும் பொருட்களின் பெயர்கள் :

- பல்வகை மீன்கள், சிப்பிகள், சங்குகள், நண்டுகள் கடலின் மூலம் கிடைக்கின்றன.
- சுண்ணாம்பு. மணல், சரளை போன்ற பொருட்கள் மற்றும் கடல் அடிவாரத்தில் கரைந்துள்ள கனிமங்கள்.
- கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு.
- கடல் நீரில் இருந்து உப்பு கிடைக்கிறது.
- கடல்வாழ், உயிரினங்களில் முத்துக்களை உற்பத்தி செய்யும் திறனுடைய யூனியோ, க்வாட்ருலா என்ற பெயருடைய சிப்பிகள் உள்ளன.
- ஆழ்கடலில் எடுக்கப்படும் முத்து உயர் ரகமாகும். முத்தை அணிந்தால் முத்து உடலில் பட்டு கரையும். அப்போது உடல் சூடு நீங்கும் என மருத்துவர்கள் குறிப்பிடுகின்றனர்.

**Question 2.**
கடற்பயணம் பற்றிய சிறுகதை ஒன்றை அறிந்து வந்து

வகுப்பறையில் பகிர்க.

**Answer:**
மாணவர்கள் தாங்களாகவே செய்ய வேண்டியவை.

கூடுதல் வினாக்கள்

**சொல்லும் பொருளும் :**

1. உரு – அழகு
2. வங்கம் – கப்பல்
3. போழ – பிளக்க
4. எல் – பகல்
5. வங்கூழ் – காற்று
6. கோடு உயர் – கரை உயர்ந்த
7. நீகான் – நாவாய் ஓட்டுபவன்
8. மாட ஒள்ளெரி – கலங்கரை விளக்கம்

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**Question 1.**
'உரு' என்பதன் பொருள் …..
அ) நாவாய் ஓட்டுபவன்
ஆ) கப்பல்
இ) கரை உயர்ந்த
ஈ) அழகு

**Answer:**
:ஈ) அழகு

**Question 2.**
'போழ' என்பதன் பொருள் …………………
அ) பிளக்க
ஆ) காற்று
இ) கப்பல்
ஈ) கலங்கரை விளக்கம்

**Answer:**
அ) பிளக்க

**Question 3.**
‘வங்கூழ்’ என்பதன் பொருள் ………………
அ) காற்று
ஆ) அழகு
இ) பிளக்க
ஈ) பகல்

**Answer:**
அ) காற்று

**Question 4.**
‘நீகான்’ என்னும் சொல்லுக்கு ……………………….. என்பது பொருள்.
அ) நாவாய் ஓட்டுபவன்
ஆ) கலங்கரை விளக்கம்
இ) பகல்
ஈ) கப்பல்

**Answer:**
அ) நாவாய் ஓட்டுபவன்

**Question 5.**
‘வங்கம்’ என்பதன் பொருள் ………………
அ) கப்பல்
ஆ) பகல்
இ) அழகு
ஈ) காற்று

**Answer:**
அ) கப்பல்

**Question 6.**
கோடு உயர் என்பதன் பொருள் ……………..
அ) கரை உயர்ந்த
ஆ) கப்பல்
இ) காற்று
ஈ) பிளக்க

**Answer:**
அ) கரை உயர்ந்த

**Question 7.**
மாட ஒள்ளெரி என்பதன் பொருள் ……………..
அ) கலங்கரை விளக்கம்
ஆ) பிளக்க
இ) கரை உயர்ந்த
ஈ) காற்று

**Answer:**
அ) கலங்கரை விளக்கம்

விடையளி:

**Question 1.**
அகநானூறு எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றா?

**Answer:**
ஆம். இது எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று.

**Question 2.**
எட்டுத் தொகை நூல்களை வரிசைப்படுத்துக:

**Answer:**
நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு.

**Question 3.**
மருதன் இளநாகனார் குறிப்பு வரைக.

**Answer:**

- மருதன் இளநாகனார் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர்.
- கலித்தொகையின் மருதத்திணையில் உள்ள முப்பத்தைந்து பாடல்களையும் பாடியவர்.
- மருதத்திணை பாடுவதில் வல்லவர் என்பதால் மருதன் இளநாகனார் என அழைக்கப்படுகிறார்.